தமிழக போக்குவரத்துக் கழகங்களால் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய Pension Trust-ற்குக்கூட இன்னும் மத்திய அரசினுடைய Income tax relaxation கிடைக்கவில்லை என்ற தகவல் என்பது சொல்லப்பட்டிருக்கிறது. அரசு அந்த விலக்கைப் பெறுவதற்கான முயற்சியை விரைந்து மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இப்போது போக்குவரத்துக் கழகங்களிலே வாரிசுகளுக்கான வேலை என்பது மறுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதுபோன்று விபத்திற்கு உள்ளாகக்கூடிய ஊழியர்களுக்கு மாற்றுப் பணி வழங்கப்படுவது உள்பட, bonus என்பது மறுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் சீர்திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகரத்திலே 30,000-க்கும் அதிகமான ஆட்டோக்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. 30,000-க்கும் அதிகமாக இயக்கப்படக்கூடிய இந்த ஆட்டோக்களுக்கு 1996 ஆம் ஆண்டு மீட்டர் கட்டணம் என்பது தீர்மானிக்கப்பட்டது. 1996 ஆம் ஆண்டிற்குப் பின்பு டீசல் விலை, பெட்ரோல் விலை கடுமையாக உயர்த்தப்பட்டதற்குப் பின்புமகூட மீட்டர்கள்.... *(மணியடிக்கப்பெற்றது)*

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மகேந்திரனுடைய பேச்சு நிறைவு பெற்றது. விவாதம் இன்று மாலை தொடரும். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் விவாதத்திற்கான பதில் உரையை வழங்குவார்.

7. அறிவிப்பு

உறுப்பினர்களுக்கான கணினி பயிற்சி நேரத்தில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களுக்கான கணினி பயிற்சி இன்று மாலை 4.30 மணிக்கு மாறாக 6-30 மணிக்குத் தொடங்கும்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை 4-30 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.